

# காகிதங்கள் பேசுதடி

(கவிதைத் தொகுப்பு)

அரியாலையூர்
செல்வி. மிஷாந்தி செல்வராஜா

# காகிதங்கள் பேசுதடி

(கவிதைத் தொகுப்பு)

அரியாலையூர்
செல்வி.மிஷாந்தி செல்வராஜா

வெளியீடு

கோபால் வெளியீட்டகம்

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "காகிதங்கள் பேசுதடி" |
| நூலின் வகை | : | புதுக்கவிதை |
| நூலாசிரியர் | : | அரியாலையூர் செல்வி. மிஷாந்தி செல்வராஜா<br>B.A, M.A in Tamil,<br>Diploma in Pre school Education (Merit Pass) |
| வெளியீடு | : | கோபால் வெளியீட்டகம் |
| பக்கங்கள் | : | 72 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| அட்டைப்படம்,<br>பக்க வடிவமைப்பு | : | எஸ். விஜய் |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல், 2017 |
| தொடர்புகளுக்கு | : | 40/01, நொத்தாரிஸ் வீதி, அரியாலை,<br>யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி 076 6419179<br>முகநூல் Mishanthy Selva<br>ஈமெயில் mishaselva1@gmail.com |
| அச்சகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம்,<br>172, மில் வீதி, வவுனியா.<br>024 2225799 / 077 9009491 |
| ISBN | : | 978-955-78990-3-9 |
| விலை | : | ரூ.220/- |

# சமர்ப்பணம்

அமரத்துவம் எய்திய
தமிழ் மாணவ உறவுகளுக்கு...

# அணிந்துரை

கவிதைக்கென்று சில வரையறைகளும் வரம்புகளும் உள. யாப்பமைதியுடனும், அணிச்சிறப்புடனும், தளைதட்டாமல் எழுதப்படுவதே கவிதை என்பர். கவிதையில் பிழையிருப்பின் அதனைச் சங்கப்பலகை ஏற்றுக் கொள்ளாது.

ஒரு காலத்தில் கடினமான செய்யுள் வடிவில் இருந்த கவிதைகள் பின்னர் படிப்படியாக இலகுபடுத்தப்பட்டது. பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற "பா" வகைகளைப் படித்துத் தெளிய பகுப்புரை மற்றும் தனி அரும்பத அகராதிகள் தேவைப்பட்டன.

பின்னர் செய்யுட்கள், கவிதை மற்றும் பாடல் வடிவம் பெற்றன. ஆயினும் யாப்பிலக்கணம் சற்றும் பிசகாமல் தளைதட்டாமல் எழுதப்பட்டது. அல்லது பாடப்பட்டது. காலம் செல்லச்செல்லக் கவிதையின் கடினத்தன்மையும் குறைக்கப்பட்டது. ஆயினும் கவிதை இலக்கணத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இலகுவாய் விளங்கிக் கொள்ளத்தக்க சொற்கள் பயன்படுத் தப்பட்டாலும் கவிதையின் தனித்துவம் கெட்டு விடாமல் பேணிக்காக்கப்பட்டது.

புரட்சிக் கவிஞன் பாரதிக்குப் பின்னர் கவிதை வடிவம் பல்வேறு மாற்றங்களைப் பெற்றது. சொல்லிலும் பொருளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. செய்யுள் வடிவம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கவிதை வடிவமாகிப் பின்னர் அவை வசனக்கவிதை, நவீன கவிதை, உரை நடைக்கவிதை, புதுக்கவிதை என்று பல்வேறு பரிணாம மாற்றங்கள் பெற்றன.

"பழையன கழிதலும் புதியன கழிதலும் வலுவில கால வகையினானே" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இம் மாற்றங்கள் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாயின. இன்றைய நவீன யுகத்தில் அந்நிய கவிதா சாரல்களும் நம் தமிழ் மீது வீச ஆரம்பித்துள்ளன. அவை "ஹைக்கூ" எனப்படும் ஜப்பானியக்

குறுங்கவிதை வடிவமும், "லிமறிக்ஸ்" எனப்படும் ஆங்கிலக் "குறும்பா" வடிவமும் ஆகும்.

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது சோதிமிக்க நவ கவிதை எந்நாளும் அழியாத மாகவிதை" என்றான் பாரதி. அதனைப் பின்பற்றியே தனது கவிதைகளைக் குறியீட்டுக் கவிதைகளாக படைத்து வருகிறார் இளம் படைப்பாளி செல்வி. மிஷாந்தி செல்வராஜா அவர்கள்.

இவரது கவிதைகள் அத்தனையும் குறியீட்டுக் கவிதைகளாகவே அமைந்திருப்பது, சொல் புதிது, சுவை புதிதாக இருப்பதை இவரது கவிதைகளை வாசித்து உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இவர் மரபுக்கவிதைகளைத் தவிர்த்து புதுக் கவிதைகளையே எழுதியிருக்கின்றார். இவரது கவிதைகளில் மனித நேயம், காதல், கழிவிரக்கம், விரக்தி, வேதனை, பந்த பாசம், ஏமாற்றம், எதிர்பார்ப்புக்கள், ஒற்றுமை, பெண்ணியம் அனைத்து உயிரினங்களினையும் நேசிக்கும் மனப்பாங்கு இழையோடுவதை அவதானிக்க முடிகின்றது. யாப்பிலக் கணத்தை மீறி மரபை உடைத்து இவர் எழுதியிருந்தாலும் இவரது கவிதைகளில் வெறும் வசனப்பாங்கு காணப்பட வில்லை என்பது விசேட அம்சமாகும்.

இன்றைய காலத்தில் சூழல் மாசடைவதால் தொற்று நோய்களிற்கு உட்பட்டு நோயாளிகள் பெருகி வருகின்ற காலத்திலே காகிதங்களுக்கு உயிர் கொடுத்து குப்பை வாளிக்குள் போடாதீர்கள் என்பதனையும், காகிதங்களால் ஏற்படும் கழிவுகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதனை மிக அழகாக சுவை புதிதாக கவிதையாக எழுதியிருப்பது இரசனைத் தன்மையாக இருக்கின்றது.

அதாவது..

"கசக்கித்தான் எறியலாமோ? என்
உருவைக் கிழித்துத்தான் போடலாமோ?
தீயிற்குள் சங்கமிக்க வைத்திடலாமோ?
தண்ணீரில் கதையத்தான் எறிந்திடலாமோ?
கல்வியில் நீங்களெல்லாம் உயரவே
கரையேற்றிடும் என்னை குப்பை வாளிக்குள் போடாதீர்கள்!

என்று காகிதங்கள் பேசினால் இப்படித்தானாம் பேசும் என்று உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

இவரது கவித்தொகுப்பில் இடம்பெறும் அத்தனை கவித் தொகுப்புக்களினதும் கவிதைத் தலைப்புக்கள் மனதைத் தொட்டு விடுகின்றன. குறிப்பாக "மரமும் மனிதனும்" , "வாளேந்தும் வாலிபர்கள்", "வாழவிடுங்கள்" போன்ற கவிதைகளின் கவி வரிகள் ஆழமானவை.

"மரமும் மனிதனும்" கவிதைத்தலைப்பில் இடம்பெறும் கவி வரிகளை சுட்டிக் கூறுகையில்...

"எம்மினத்தை சரிக்க முயன்றான்
வேரோடு தினமும் அறுத்தான்
இல்லத்தின் கதவாக ஆக்கினான்
காற்றுக்காக வாயிற் கதவை திறக்கின்றான்
சவப்பெட்டியாக மாற்றினான் - இறுதியில்
எனக்குள்ளே சங்கமிக்கின்றான்.

என்று மரத்துக்கும் மனிதனுக்கும் உள்ள ஒற்றுமைத் தன்மையை சொல் புதிதாய், சுவை புதிதாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வாளேந்தும் வாலிபர்கள்" என்னும் கவிதையிலே இடம்பெறும் கவி வரிகள் சில தொட்டுக்காட்டப்பட வேண்டியதே. அதாவது

"வாளெடுத்து காத்திட்ட மன்னர்கள் மடிந்தனர்
வாள் வீசி உயிர் பறிக்கும் இளைஞர்கள் பெருகினர்"

காலத்தின் தேவையறிந்து செல்வி மிஷாந்தி செல்வராஜா அவர்கள் ஒரு பெண்ணிய எழுத்தாளராக துணிந்து எழுதிய வீரப்பண்பும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொரு அவசியப் பாடாகும்.

"வாழ விடுங்கள்" என்னும் கவிதைத் தலைப்பில் இடம் பெறும் கவி வரிகளில்

"கொக்கிற்கும் இரையாக வேண்டும் - உங்கள்
நாக்குக்கும் இரையாக வேண்டும்"

என்னும் வரிகள் ஒரு மீனின் ஏக்கம், பரிதவிப்பு நிலைகளை சொல் புதிதாய், சுவை புதிதாய் நயமாக எடுத்துரைக்கும் இவர் ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் இடம் பெற்றிருப்பது சாலப்பொருத்தமாகும்.

கலைவளம் மிக்க அரியாலை மண்ணிலே பிறந்த செல்வி மிஷாந்தி செல்வராஜா அவர்களின் கவிதைகளை தொகுத்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் கோபால் வெளியீட்டாளர்கள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இக்கவிதைத்தொகுப்பின் அட்டைப்படமும் பல அர்த்தம் புரிய வைக்கும் அட்டைப்படமாக இருக்கின்றது.

இக்கலைஞர் மேலும் வளர்க. இவர் தனது எழுத்தாற்றலை வளர்க்கவும், தமிழ் இலக்கியப்பாதையில் தொடர்ந்து பிரகாசிக்கவும் இறையருள் கிடைப்பதாக.

வாழ்த்துக்களுடன்

**வைத்திய கலாநிதி.ப.சத்தியலிங்கம்**
சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

# ஆசியுரை

ஈழத்து இலக்கிய வரலாற்றில் புதிதாகத்தடம் பதித்த பெண் எழுத்தாளர்கள் வரிசையில் அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராஜா அவர்களும் ஒருவராவார். சமூகத்தில் புரையோடிக் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளை தனது படைப்புக்கள் வாயிலாக வெளிப்படுத்தும் இவர் கலைமகளின் அருள் பெற்ற ஒரு எழுத்தாளர் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. தான் எந்நாளும் வணங்கித்துதிக்கின்ற கலைத்தாயின் ஆசியுடன் எழுத்துலகில் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் செயற்படும் இவருக்கு ஆசி வழங்குவதில் எமது ஆலய அறங்காவலர் என்ற வகையில் நான் பெருமைய டைகின்றேன்.

நேர்மையும் துணிச்சலும் மிக்க முன்னணிப்பெண் எழுத்தாளர்கள் வரிசையில் இடம்பெறும் மிஷாந்தி செல்வராஜா அவர்கள் தனது படைப்புக்களினூடாக வாசகர்களின் உள்ளத்தில் நீங்காது இடம்பிடித்த ஒருவராக என்றும் மிளிருகின்றார். இவர்தம் முன்னைய படைப்புக்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் இக்கவிதைத் தொகுப்பானது அமைந்து விடுகின்றது. ஏனெனில் அந்த அளவிற்கு எவை எவற்றை சமுதாயம் எதிர்பார்க்கின்றதோ அவை அனைத்தையுமே தன்னுடைய இக்கவிதைதொகுப்பில் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

சமுதாய முன்னேற்றம் கருதிய படைப்புக்களை ஆக்குகின்ற செல்வி மிஷாந்தி செல்வராஜாவின் இலக்கியப்பயணம் தொடர அன்னை கலைவாணியின் அருளாசியை என்றும் வேண்டி நிற்கின்றேன்.

**திரு.ஐ.குமரதாசன்**
ஆலய அறங்காவலர்
ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயம்
அரியாலை.

# வாழ்த்துரை

கலைகள் செழித்தோங்கும் அரியாலை மண்ணிலே பிறந்து கலைகளில் ஆர்வமிக்க செல்வி மிஷாந்தி செல்வராஜா பள்ளிப்பருவத்தில் இருந்து கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் போன்ற போட்டிகளில் பங்கு பெற்று சான்றிதழ் களையும் பெற்றது மட்டுமல்லாமல் பத்திரிகைத்துறைகளிலும் தனது கலையாற்றலை சமூக சேவைகளையும் வெளிக்காட்டி யுள்ளார். உதயன், வலம்புரி, தினக்குரல் போன்ற பத்திரிகை களில் அவரது படைப்புக்களைக் காணமுடிகின்றது.

கலைத்துறை மாணவியாகவும், முன்பள்ளி ஆசிரியராகவும் கடமையாற்றி யாழ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி (தமிழ்) பட்டத்தையும் பெற்றமை தமிழின் மேல் உள்ள ஆர்வத்தைக் காட்டி நிற்கின்றது. இவ்விளம்பராயத்திலே "மூன்றாம் முத்தம்" என்ற குறுநாவலை வெளியிட்டு நாவலில் ஊடாக பிரசித்தி பெற்று ஈழத்துப்பெண் எழுத்தாளர்கள் என்ற வரிசையில் "ஜீவநதி" சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. எமது வடமாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும், செய்திமடல் ஆசிரியராகவும் கடமையாற்றி வருகின்றார் என்பதனையும் பெருமையுடன் கூறுவதுடன் "காகிதங்கள் பேசுதடி" என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளில் ஜீவராசிகளின் அனைத்துப் பாத்திரங்களிலும் தன்னை உருமாற்றி உயிரினங்களின் தேவைகளையும், சமூகவியல் தேவைக ளையும் சுட்டிக் காட்டி உள்ளார்.

செல்வி மிஷாந்தி செல்வராஜாவின் "காகிதங்கள் பேசுதடி" என்ற கவித்தொகுப்பு இன்றைய சூழ்நிலையில் பேசப்பட்ட விடயங்கள் யாவற்றையும் தொட்டுச்செல்கின்றது. இக்கலைஞர் மேலும் வளர, தொடர்ந்து பல நூல்கள் வெளியிட எல்லாம் வல்ல இறைவன் ஆசிகள் கிடைக்க வேண்டும். இவரது பணிகள் மேலும் வளர்க, தொடர்க.

**சி.திருவாகரன்**
செயலாளர்,
சுகாதார அமைச்சு, வடமாகாணம்.

# வாய்ப்பிற்கு நன்றி!

தமிழை வளர்ப்பது தங்களுக்கான தார்மீகப் பொறுப்பென்பதை நன்குணர்ந்த எமது கவிஞர்கள், படைப்பாளிகள், எழுத்தா ளர்களின் படைப்புக்களை தரமாகவும், அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான விலையிலும் படைப்புக்களை நூலுரு வாக்கம் செய்து வருகின்றமையில் எமது அச்சகமானது பெருமிதம் கொள்கின்றது..

விசேடமாக வவுனியாவை மட்டும் அல்லாமல் பிற மாவட்டங்க ளிலிருந்தும் படைப்பாளர்கள் தொடர்புகொண்டு படைப்புக்களை பதிப்புச் செய்ய முனைந்திருப்பது நிறைவைத்தருகின்றது. அதுமட்டுமல்லாது வெளிநாடுகளிலிருந்தும் பல எழுத்தா ளர்களின் நூல்களை அச்சடித்திருக்கின்றோம். அவற்றில், அவுஸ்திரேலியா, ஜேர்மன், சுவிஸ், இத்தாலி, நெதர்லாந்து, மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், நாம் பணத்திற்காக மட்டும் இப்படைப்பா ளிகளின் நூல்களை அச்சடித்து கொடுப்பதில்லை மாறாக, சமூகத் திற்கும், நாட்டிற்கும் நல்லபல கருத்துக்களையும் தெளிவான சிந்தனாசக்தியுடனான செய்திகளையும் பெற்றுத் தரவேண்டும் என்பதோடு எமது தமிழ்ச் சமூகத்தில் எழுத்தார்வம் மிக்கவர்களை ஊக்கப்படுத்தி அவர்களிடமிருந்து சமூகத்திற்கு சிறந்த நற்பண்புகளை எழுத்துக்களினூடாக வளர்த்து நல்ல பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோளாகும்.

ஆக, வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் பணிபுரியும் செல்வி.மிஷாந்தி செல்வராஜா அவர்களது கவிதைகள் ஒவ்வொன்றும் தன்னை ஒரு சிறந்த படைப்பாளியாக இனங் காட்டுவதாக அமைகின்றது. அவருடைய கவிதைகள் யாவும் வாசகர்களுக்கு திடமளிக்கக்கூடிய திருப்புமுனைகளாக அமைகின்றது. நாகரிகம் வளர்ந்து, யுகங்கள் மாறினாலும்

இதுபோன்ற கவிதைகள் படைக்கப்படுவதிலேயே தமிழ் இலக்கியம் நின்று நிலைப்பது சாத்தியமாகின்றது. யாதெனில், மனிதகுலம் தோன்றும் போதே எழுத்துக்களும் தோன்றியது போல, எழுத்துக்களினூடாக தன்னுடையதும், தன் சமூகம் சார்ந்ததுமான கருத்துப்பரிமாற்றங்களை வெளிப்படுத்தி வருகின்ற மனிதன், அவ்வாறு தோற்றம் பெற்ற எழுத்து வடிவங்களைக் கொண்டு கருத்துரைப்பது, சுதந்திரம் பேணுவது, நாகரிகம் வெளிப்படுத்துவது போன்ற பண்புகளை தனதாக்கிக் கொண்டுள்ளான்.

எனவே, எது எவ்வாறிருப்பினும் ஆசிரியரின் கவிதைகள் அனேகமானவை சமுதாய சீர்திருத்தங்களையும், உயிர்க ளிடத்தே காட்டவேண்டிய மனித பண்பு விழுமியங்களையும் மனதிற்கு மீண்டுமொருமுறை விட்டுச் செல்கின்றது. செல்வி.மிஷாந்தி செல்வராஜாவின் நல்ல படைப்புக்கள் இன்னுமின்னும் தொடர வேண்டும். தொடர்ந்து பல புதிய படைப்புக்களை படைத்து இலக்கியப்பரப்பினிலே நின்று நிலைப்பதோடு இப்படைப்பை எமது பதிப்பகத்தில் நூலுருவாக்கம் செய்வதில் மன மகிழும் அதேவேளை, இவரை வாழ்த்துவதில் நிறைவு கொள்கின்றேன்.

**எஸ்.விஜய்**
உரிமையாளர்,
விஜய் அச்சுப் பதிப்பகம்

# என்னுரை

கலைகள் நிறைந்த, வாணி சரஸ்வதி உறைந்துள்ள அரியாலையூரைப் பிறப்பிடமாகக் கொண்டு அரியாலை மண்ணிலே என்னை ஈன்றெடுத்த என் அன்னைக்கும், வாணி சரஸ்வதி ஆலயத்திலே கவிஞர் ஐயாத்துரை அவர்கள் என் கைபிடித்து "அ" என்று எழுத்தை மட்டுமல்ல தன்னுடன் உறைந்துள்ள கவி மழையின் சில தூறல்களையும் என்னிலே பதித்து விட்டு தான் ஈன்றெடுத்த செல்வப்புதல்வி திருமதி மகேந்திரன் அபிராமியிடம் அரிவரிக் கல்வியினை கற்று உயர்ந்திட வழிகாட்டி அரியாலை மண்ணிலே செல்வி மிஷாந்தி செல்வராஜாவாக படைப்புக்களை உருவாக்க வழிகாட்டிய என் மூத்த கலைஞரான அமரத்துவம் எய்திய இன்று வரை நீங்காப்புகழோடு நீடிக்கின்ற கவிஞர் வேலுப்பிள்ளை ஐயாத்துரை அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்

என் எண்ணத்தின் கற்பனையில், கண்களில் தோன்றிய காட்சிகளை உங்களை சிந்தனைக்கு சுவையாக "காகிதங்கள் பேசுதடி" என்ற தலைப்பில் கவிதையாக தாள்களிலே தரம்பிரித்து எழுதியுள்ளேன். நான் எழுதிய கவிதைகளை நீங்களும் படித்து எல்லோருடனும் பகிர்ந்து பேச வேண்டும் என்பதே எனது அவா.

நீங்கள் பேச அத்தனை பேரும் பேச வேண்டும். தித்திப்பாக இருந்தாலும் சரி, கசப்பாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் என்னோடு நீங்களும் பேச வேண்டும் அடுத்து வரும் எனது படைப்புக்களை மேலும் மேம்படுத்த உங்கள் பேச்சுக்களே உரம் சேர்க்க வேண்டும்.

இன்றைய உலகில் அன்றாட வாழ்வில் நான் கண்ணுற்ற காட்சிகளினை கவிதையாக உங்கள் எல்லோரும் பகிர்ந்திட வேண்டும் என்பதே எனது அவா. நாட்டின் தேவையறிந்தும், அனைத்து உயிரினங்களின் பிறவிகளின் உருவாக நான் இருந்தால் எப்படியெல்லாம் பேசுவேனோ அவ்வாறெல்லாம்

பேசுகின்றேன். "காகிதங்கள் பேசுதடி" என்ற தலைப்பினூடாகவே.

எனது படைப்புகளுக்கு வடிவம் கொடுத்த வவுனியா "விஜய் அச்சுப் பதிப்பக" உரிமையாளர் திரு.எஸ்.விஜய் அவர்களுக்கும், அணிந்துரை, ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிய மதிப்புக்குரியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"பேசுங்கள் சிந்தியுங்கள், விமர்சியுங்கள், வளர்த்திடுங்கள் மேலும் என்னை.

நன்றி

என்றும் உங்களுடன்
**அரியாலையூர்**
**செல்வி மிஷாந்தி செல்வராஜா**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அம்மா | 01 |
| 2. | அப்பா | 01 |
| 3. | மகளே கேள்! | 02 |
| 4. | என்னமுறை சொல்வேன் நான் | 02 |
| 5. | விசிறி | 03 |
| 6. | பத்திரிகைகளின் பரிதவிப்பு | 04 |
| 7. | தமிழ் மொழி | 05 |
| 8. | ஆறுமணி | 07 |
| 9. | பார்வைகள் | 07 |
| 10. | போக்குவரத்து சமிக்ஞை | 08 |
| 11. | மழையே நீ வர வேண்டாம் | 09 |
| 12. | வந்திடு மழையே! | 10 |
| 13. | குறி வைக்காதீர் | 11 |
| 14. | தாய்மை | 12 |
| 15. | நான் யார்? | 13 |
| 16. | கடிநாய் கவனம் | 14 |
| 17. | காதல் | 15 |
| 18. | ஆசானாக வேண்டும் | 15 |
| 19. | ஒரு பெண்ணின் ஏக்கம் | 16 |
| 20. | கொலசிப் | 17 |
| 21. | மனிதனின் பெருமை | 18 |
| 22. | தாலாட்டுப் பாட வா அம்மா | 19 |
| 23. | வாளேந்தும் வாலிபர்கள் | 19 |
| 24. | தமிழுக்காக | 20 |
| 25. | நான் காத்திடுவேனம்மா உன்னை | 20 |
| 26. | வாழைக்கும் வாழ்வளியுங்கள் | 21 |
| 27. | அம்மா நீ மட்டும் போதும் | 22 |
| 28. | நகர்ந்திடு | 23 |
| 29. | அன்னம் பகிர்ந்திடு | 24 |
| 30. | புரிந்து கொள் | 25 |
| 31. | வாழவிடுங்கள் | 26 |

| | |
|---|---|
| 32. ஏனிந்த நிலை | 27 |
| 33. என் மேனியும் பொன் மேனியே! | 28 |
| 34. தாயின் கருவறை | 29 |
| 35. இணையமே! | 29 |
| 36. மனைவியாக வா | 30 |
| 37. வாழுங்கள் | 31 |
| 38. மனிதனாக வாழ | 31 |
| 39. காகிதங்கள் பேசுதடி | 32 |
| 40. மொழி | 33 |
| 41. இளமை | 34 |
| 42. மரமும் மனிதனும் | 35 |
| 43. யாழ் ஓசை கேட்கட்டும் | 36 |
| 44. பட்டச்சான்றிதழுக்கு மரியாதை | 36 |
| 45. தீயிற்கு ஒரு வேண்டுகோள் | 37 |
| 46. அம்மா வேணும் | 38 |
| 47. நாடு நாடாக வேண்டும் | 39 |
| 48. எங்கே யாழ் வஞ்சியர்கள்? | 40 |
| 49. இலங்கை நாடு நம் நாடு | 41 |
| 50. நிம்மதி | 42 |
| 51. நானும் ஒரு பெண் தானே | 43 |
| 52. நாளைய உலகம் | 44 |
| 53. எங்களுக்கும் வழி கொடுங்கள் | 45 |
| 54. எங்களுக்கும் தண்ணீர் தாருங்கள் | 46 |
| 55. நீதி எங்கே? | 47 |
| 56. பெண்ணெனப்படுபவள் யார்? | 48 |
| 57. தந்தையின் தவிப்பு | 49 |
| 58. விதியை மாற்றுபவன் நீ | 50 |
| 59. மண்வளம் காக்கும் கண்மணிகள் | 51 |
| 60. மனைவி தந்த பரிசு | 52 |
| 61. ஒரு நிமிடம் சிந்தியுங்கள் | 53 |
| 62. வஞ்சியர்களே வன்முறையைத் தூண்டாதீர்கள் | 54 |
| 63. இத்தனையும் கிடைத்திடுமா? | 55 |


காகிதங்கள்
பேசுதடி
(கவிதைத் தொகுப்பு)
அரியாலையூர்
செல்வி. மிஷாந்தி செல்வராஜா

## அம்மா

கருவில் சுமந்து
கதைகள் பேசி
கலையாய் வடித்தெடுத்து
கச்சிதமாய் உருவம் தந்து
காய்ச்சல் என்று வந்த போது
கண்கலங்கி தனை உருக்கி
கலங்காது காத்து
கல்வியினில் நான் உயர
கண்விழித்து என்னோடு
கடைசி வரை உண்மையாய் அன்பு செலுத்தும்
கண் கண்ட தெய்வம் !

## அப்பா

பத்து மாத வலி சுமக்காமலே - இறுதி
பயணம் வரை தன் உடல் வருத்தி
பணம் சேர்த்து தன் வலி பொறுத்து
பிள்ளைச் செல்வத்துக்காக கல்வி சேர்த்து
புகழ் சேர்க்க ஆசைப்பட்டு தன் மேனி தளர்த்தும்
பாரினில் நான் கண்ட தெய்வம் அப்பா!

## மகளே கேள்!

இன்று நீ உன் மகளோடு வந்து
இவ்வில்லம் சேர்த்தாய் என்னை !
நாளை அவள் தன் மகளோடு வந்து
இவ்வில்லம் சேர்ப்பாய் உன்னை !

## என்ன முறை சொல்வேன் நான்

எத்தனை தடவை அப்பா என அழைத்திருப்பேன் !
எண்ணியே பார்க்கவில்லையா அப்பா!
எமனுக்குப் பலி போகாமல்
வீதியினிலே பலி போகாமல்
கயவருக்கும் பலி போகாமல்
காமுகருக்கும் பலி போகாமல்
பத்திரமாய் பார்க்கச் சொன்னாளே அம்மா !
பாவி மகள் என்னை அருந்திய மது தான் சீரழித்ததோ?
பாவி மகள் என்னை சீரழித்தது
பாழாய்ப்போன மதுப்போத்தல்தானோ?

# விசிறி

மின்சாரத்தை இணைத்தான்
மின்விசிறியைப் பொருத்தினான்
ஆளியை அழுத்தினான்
காற்றினை வாங்கினான்

என்னை பார்க்கவில்லை அவன்
ஏக்கமுடன் படுத்தேன் பக்கத்தினிலே !
மின் தடங்கலுற்று துண்டிக்கப்பட்டே
மீண்டும் தேடுவானோ என்று ஏங்கினேன் நானும் !

பாயினிலே அவனுடனே படுத்தேன்
திரும்பிக்கூட பார்க்கவில்லை அவன்
இரவின் நிசியினில் தேடினான் என்னை
தடவிப்பிடித்து கைகளிலே எடுத்தான்

வியர்வை கொட்டினான்
விரல்களால் பிடித்தான்
அசைத்தான் என்னை
கொடுத்தேன் இதமான காற்றினை !

## பத்திரிகைகளின் பரிதவிப்பு

பக்கத்து வீட்டினிலே புதினம் பாராது
பத்திரிகையாக வரும் என் புதினம் அறிந்திடு

எனைப் பார்ப்பார் யாருமில்லையா?
எனை அறியார் யாருமில்லையா?

பற்பல நாமங்கள் எடுக்கின்றேன்
பற்பல செய்திகள் தாங்குகின்றேன்

ஏன் என்னைப் பார்க்கிறீர்கள் இல்லை?
ஏன் என்னை கைகளில் ஏந்துகிறீர்கள் இல்லை?

எத்தனை செய்திகள் எத்தனை விடயங்கள்
எக்கச்சக்கமாய் அள்ளி வருகின்றேன் என்னையும் கவனி

ஏணியாய் நீ உயர்ந்திடவே ஏற்றம் தந்திடுவேன்
எளிமையான விலையில் கிடைத்திடுவேன்

# தமிழ் மொழி

தாய் மண் ஈன்றெடுத்த தரணியிலே
தமிழிச்சி என்றதொரு பெயரெடுத்து
தலைமுறைதலை முறையாக வாழ்வதற்கு
தாயாக்கி என்னை அம்மா என்றழைத்தது இனியதமிழே!

தமிழன் என்று சொல்லவும்
தலைநிமிர்ந்து நிற்கவும்
தமிழ்ப்பண்பாடு பேணவும்
தமிழ்ப் பெண்ணாக நாணிநிற்ககற்றுத் தந்ததும் தமிழே !

தாயின் கருவில் நான் கேட்டதும் தமிழே
தரணியில் நான் வாழவைப்பதுவும் தமிழே
தீந்தமிழ் இசையில் ஊறிடவைப்பதுவும் தமிழே
தீராதமொழிப்பற்றினையும் உண்டாக்கியதும் தமிழே !

தமிழ்க்கம்பன் பாடியதும் இனியதமிழே
தமிழ் மன்னர்களும் பேசியதும் இனியதமிழே
தாளிசைப்பாடல்களையும் பாடவைத்ததும் தமிழே
தேன் தமிழ் கவிதைகளையும் தந்ததும் எமதுதமிழே !

வள்ளுவன் குறள்களில் ஒலிப்பதுவும் தமிழே
வாசுகி கற்பினைக் காத்ததும் இனியதமிழே
வந்தோரை விருந்தோம்ப வைப்பதுவும் தமிழே
வகிடெடுத்து வஞ்சியர் நெற்றியில் இட வைப்பதுவும் தமிழே !

பாணன் பாடியதும் இனியதமிழே
பாரதி பாடிய கவிகளிலும் ஒலிப்பதுவும் தமிழே
பாரதி தாசன் பாடியதும் பொங்குதமிழே
பாரத தேசம் கண்டதுவும் தித்திக்கும் தமிழே!

சங்கம் வளர்த்ததும் தமிழே
காதலைப் பாடியதுவும் இனியதமிழே
வீரப்பெண்களை படைத்ததும் நமது தமிழே
வெற்றிவாகை சூட வைத்ததுவும் நம் தமிழே !

பாவேந்தர்கள் வளர்த்ததும் தொழிலாளித்தமிழே
பாரினிலே ஊற்றெடுப்பதுவும் நம் தமிழே
பச்சிளம் குழந்தைகளை தாலாட்டுப்பாட வைத்ததும் தமிழே
பதிற்பாட்டாய் நாட்டார் பாடல்களாய் அமைந்ததும் நம் தமிழே!

## ஆறு மணி

சட்டம் வேணும் சமத்துவம் வேணும்
சலனமின்றி வாழ்ந்திட வேணும்
சமவுரிமை வேணும் என்றே பாடிய மகான்கள்
சலங்கை அணியும் பெண்ணே !
சாயங்காலம் ஆகுது
சீக்கிரமாய் கிளம்பு மாலை
ஆறுமணி ஆகுது என்கிறார்கள் !

## பார்வைகள்

எட்டு முழச்சேலையுடன் வீதியில் போனால்
எட்டி எட்டிப் பார்க்கிறார்கள்
இடுப்பு மடிப்பென்ன !
மார்பின் அளவென்ன என்று !
குட்டைப்பாவாடையில் குமரியொருத்தி
குழந்தையுடன் கொஞ்சிப்போகையிலே
தொடையழகென்ன !
நளினமென்ன ! என்று பார்க்கிறார்கள்
கோயில் கருவறை வாசலிலே
அபிஷேகம் செய்யும் அம்மனை மட்டும்
பக்திப்பார்வையுடன் கும்பிடுகிறார்களே!
காமுகரின் பார்வைக்கு
கடவுள் மட்டும் தான்
விதி விலக்கா?

# போக்குவரத்து சமிக்ஞை

நிறங்கள் படிக்க அரிவரி செல் மனிதா!
வர்ணங்கள் காட்டியும் உன் எண்ணங்கள்
சிதைவடைந்து விட்டனவோ?
கள் மயக்கமுடன் வருகிறாயா?
மனிதர்கள் உயிர் குடிக்க வருகிறாயா? சாலைகளில்
சாரதியாக மட்டும் வா !
எமதர்மனாக மட்டும் வரதே !
எம்மின மக்களை நாம் காத்திடவே !
என்னையும் கொஞ்சம் கவனி !
எதிரில் வருபவனையும் வரவேற்கவே !

# மழையே நீ வரவேண்டாம்

மழையே நீ வரவேண்டாம்
மண்ணிலே நீ வரவேண்டாம்

மழைக்கால கப்பல்கள் கட்டும் சிறுவர்கள் நாமல்ல !
மண்சோறு தின்னும் சிறுவர்கள் நாமே !

பள்ளிச் சீருடையும் நனைகிறதே !
பாடப்புத்தகங்களும் நனைகிறதே !

பானைச் சோறும் வேகுதில்லையே !
கூரை வழியே நீ புகுந்துவிட்டால்

எங்கள் கண்களிலும் கண்ணீர் மழை வருகிறதே !
காணி நிலம் எமக்கு இல்லையே !

வீடு ஒன்று அமைத்திட வீட்டுத்திட்டமும் கிடைக்கவில்லையே !
நானும் வளர்ந்து பாரினிலே

நாளெல்லாம் என் பெற்றோரைக்காத்திடவே
கொஞ்ச நாள் வரை நீ விண்ணிலே வசித்திடு மழையே !

# வந்திடு மழையே

பசுமை குறைந்து விட்டது
செழுமை வற்றிவிட்டது
குளிர்மை நின்று விட்டது
வறுமை தொடங்கி விட்டது

மண்ணகம் நின் முத்தம் பெற்றிட
மன்றாடி நிற்கின்றது
மாந்தர் தம் குறை போக்கிட
மொத்தமாக பொழிந்திடு மழையே !

வானகமே ! வையகம் அழுகின்றது
வயிற்றில் அடிக்காதே !
வயிறாற நாம் சாப்பிட
வைகை ஆறென பொழிந்திடுவாயே !

## குறி வைக்காதீர்கள்

அம்மா என்று கதறும் சத்தம் கேட்கவில்லையா ?
அன்றாடம் நான் நான் படும் வலி புரியவில்லையா?
மடிப்பால் தானே நாளும் தருகின்றேன்
பசுப்பால் என நீங்களும் அருந்தவே !
சாதுவான பிராணி நானெனத் தெரிந்தும்
தீக்காயம் ஏன் என் மேனிதனில் வைக்கிறீர்கள்?
தீராத வலி இது என்று தெரியாதா ?
நானும் ஓர் உயிர் என உங்களுக்குப் புரியாதா?
உங்கள் இல்லத்தில் நானும் ஒருயிர் என அறிய முடியாதா ?
குறி வைத்தா எனைக்காண முடியும் ?
நீவீர் ஈன்ற மக்களுக்கும் குறி வைத்தா இனம் காணமுடியும் ?
எங்களுக்கு மட்டுமேன் இந்தக் கொடுமை ?
நாம் ஈன்ற கன்றுகளுக்கும் ஏன் இந்த நிலைமை ?
பட்டிப்பொங்கல் என்று வந்ததும் பானை வைத்து
பொங்கல் செய்து பொட்டிட்டு மாலையிட்டு தொழுத பின்னே
மாட்டு இறைச்சி வேணும் என்றே எங்களை
நீங்கள் வதம் செய்து உண்ணாதீர்கள்!

## தாய்மை

நித்தம் நித்தம் தேடி மகனே
தினமும் உன் நினைவால் வாடி

கைத்தொலைபேசியில் உரையாடி
உன் வரவுக்காய் நாளும் ஏங்கி

உருக்குலைந்து போனேன் நானே ! நின்
வண்ணமுகம் காணவே !

அன்னமிட யாருண்டு ! மகனே !
ஆதரவாய் அணைக்க யாருண்டு ?

அம்மா என்றழைக்க எனக்கு யாருண்டு ? எல்லாம்
அறிந்திருந்தும் அனாதையாக்கி விட்டாயே ?

ராசனே நீ தொலை தூரம் இருந்தாலும்
தொலைபேசியில் தானும் உரையாடி இருந்தால்

தளர்ந்து போய் இருக்க மாட்டேனே !
தவப்புதல்வனே தங்கமகனே!

ஏனிந்த அவலம் !
தாயாக நான் இருப்பதால் போலும் !

# நான் யார்?

பெண் என்றும்
பேதை என்றும்
மங்கை என்றும்
மடந்தை என்றும்
குயிலே என்றும்
மயிலே என்றும்
மானே என்றும்
தேனே என்றும்
மணமானதும் திருமதி என்றும்
பதி இழந்ததும் விதவை என்றும்
விளங்காதவள் என்பதுவும்
ஒன்றுமே விளங்காதவளா?

## கடிநாய் கவனம்

கவனமாகத்தானே இருக்கின்றேன்
கடிக்காமல் தானே இருக்கின்றேன்
காலடியில் தானே இருக்கிறேன்
கள்வரை கண்டால் தானே குரைக்கிறேன்

கடிநாயென ஏன் எழுதினாய்?
நீ மட்டும் சொற்களால் கடிக்கிறாய்
நல்லவவனாக ஏன் நடிக்கிறாய்?
நாங்களெல்லாம் கடிநாய்கள் அல்ல!

அடிக் அடிக் என துரத்துகிறாயே!
அடிக்கொரு தடவை அழைக்கிறாயே!
நம்மினங்கள் நன்றியுடையவர்களே!
நயவஞ்சக மனிதர்களே கேளீர்!

மனிதமின்றிய மனிதரைக் கடித்திட
நன்றியுடைய எம் உமிழ் நீர்
எச்சில் நீர் ஆகி அசிங்கப்படவே
கடி நாயென வாழ மாட்டோம்!

## காதல்

கண்களால் பேசி
மனதால் நேசித்து - திரு
மணத்தால் ஒன்று கூடி
ஆயுள் வரை வாழும்
ஈருடல் ஓருயிர் வாழ்க்கை அது !

## ஆசானாக வேண்டும்

நானொரு ஆசானாக வேண்டும்
நாட்டை முன்னேற்றிட வேண்டும் - அதில்

நானொரு ஆசானாக வேண்டும்
ஊதியம் என் நோக்கமல்ல கடின

உழைப்பே நோக்கமாக வேண்டும்
வைத்தியர்களை உருவாக்கிட வேண்டும்

பொறியியலாளர்களை உருவாக்கிட வேண்டும்
சிற்பிகளை உருவாக்கிட வேண்டும்

முத்தமிழ் கலைகளை வளர்த்திட வேண்டும்
அஞ்ஞான இருளினை அகற்றிட வேண்டும்

ஞான ஒளியினை நல்கிட வேண்டும்
வேண்டும் வேண்டும் ஆசானாக நான் ஆகிட வேண்டும்.

# ஒரு பெண்ணின் ஏக்கம்

எழுதுகின்றேன் நான்
என் மூச்சு நிற்கும் வரை

எத்தனை கனவுகள்
எத்தனை ஆசைகள்

எண்ணங்கள் பல இருந்தும்
ஈடேறவில்லையே !

ஏனிந்த அவலம் ?
ஏமாற்றமாக துடிக்குது மனது !

எத்தனையோ உறவுகள் இருந்தும் அனாதையென
மனது தனிமையை உணருகின்றது

பெண் என்ற வடிவமெடுத்தேன்
அரும்பாகி மொட்டாகி காயாகவில்லை

கனியாகவில்லை !
நான் அலியுமில்லை !

# கொலசிப்

கொலசிப் வேண்டாமம்மா
முடியவில்லையம்மா எனக்கு !

படி படி என்று பலமாய் கத்துறாயே நீ மட்டும்
சின்னத்திரைக்குள் மூழ்கி முத்தெடுக்கிறாயே !

நாடக நடிப்பில் அழுது வடிக்கிறாயே
என் துன்பம் கண்டு துடிக்கிறாய் இல்லையே ஏனம்மா ?

கொஞ்சம் விளையாட விடம்மா
கெஞ்சியே உனைக் கேட்கின்றேன்

பள்ளிக்குப் போனாலும் புத்தகம் தான்
ரியூசனுக்கு போனாலும் புத்தகம் தான்

முந்தி நீ விளையாடிய கெந்தி விளையாட்டினை
கிளித்தட்டு விளையாடிய கதையினை

எட்டுக்கோடிட்டு விளையாடிய கதையினை
என் கூட சேர்ந்து விளையாடிக் காட்டிடம்மா !

# மனிதனின் பெருமை

மனிதன் என்றொரு உருவெடுத்து
நடமாடும் மனிதவுருப்பிசாசுகளாக
மனிதம் இன்றி வாழ்ந்து
மண்ணில் மடியும் போது
வண்டுகளுக்கும் புழுக்களுக்கும்
உணவாகிப்போகும் மனித இனத்தின்
பெருமை தான் என்ன ?

தானம் இன்றி நிதானம் இன்றி
தாயை இழந்து தாரத்தை இழந்து
தரணியில் வாழ்ந்து
தாகம் என்று தவிப்பவர்களுக்கு
தண்ணீரும் அள்ளி வழங்காமல்
தீயிற்கு இரையாகி விடும் இவ்வுடலின்
பெருமை தான் என்ன ?

## தாலாட்டு பாட வா அம்மா

தாலாட்டுப்பாட யாருமில்லையே
தாலாட்டுப்பாட வாம்மா
தங்கமே என்று பாடிட வாம்மா !
தோள் மீது ஏந்தி பாடிட வா அம்மா !

தாய்ப்பால் மட்டும் தா அம்மா
தலையணை தூக்கம் வேண்டாம் அம்மா
தாய்மடி மட்டும் போதும் அம்மா !
தீந்தமிழ் இசையால் பாடி தூங்கிட வைத்திடம்மா !

## வாளேந்தும் வாலிபர்கள்

முற்கால மன்னர்கள் இக்கால வாலிபர்கள்
வாளெடுத்து காத்திட்ட மன்னர்கள் மடிந்தனர்
வாள்வீசி உயிர் பறிக்கும் இளைஞர்கள் பெருகினர்
வலை வீசி தேடித் தேடியே உயிர் பறிக்கும் எமதர்மகள் !

முற்கால மன்னர்கள் வாள்வீச்சினால்
மாங்கையர்கள் திருமாங்கல்ய திருமதியானார்கள்
இக்கால வாலிபர்கள் வாள்வீச்சினால்
மாங்கையர்கள் மாங்கல்யம் இழந்து
விதவைகள் ஆகின்றார்கள் !

## தமிழுக்காக

தமிழ் எங்கள் மூச்சு
தினமும் அதனை சுவாசி

தமிழ் எங்கள் பேச்சு
தினமும் அதனை வாசி

தமிழ் எங்கள் பசி
தினமும் அதனை தேடு

தமிழ் எங்கள் நினைவு
தினமும் அதனை யோசி

## நான் காத்திடுவேனம்மா உன்னை!

வறுமை ஒரு தடையல்ல அம்மா
வானுயர படித்திடுவேன் நானே
சொல்லித்தர ஆசான்உண்டு
சுயமாக கற்றிட சித்தம் உண்டு
நீ பட்ட துயரங்கள் கண்ணுற்று
நீங்காப் புகழுடன் நீ வாழ்ந்திட
நீரில் தத்தளிக்கும் சிறு துரும்பு போலன்றி
நீரைக்கடந்து கரைமேவும் குச்சியாவேனம்மா
கலங்கிடாதே அம்மா
கண்ணுக்கு கண்ணாக நான் காத்து
காலமெல்லாம் காத்திடுவேன் அம்மா
கல்வியில் நான் உயர்ந்து
களிப்புடனே வாழ வைப்பேனம்மா !

## வாழைக்கும் வாழ்வளியுங்கள்

வாழையாக ஏன் பிறந்ததேன் ?
வாழப் போகிறவனுக்கும் வரவேற்பாளி ஆகிடவோ ?
வாழ்க்கை முடிந்தவனுக்கும் வரவேற்பாளி ஆகிடவோ ?
வாளையெடு வாழை வெட்டு என்று
என் வயிற்றை வெட்டுகிறார்கள் !
வாழைக்கனியாக கனியுமுன்னே கருமாரி வீட்டினிலே
வாழைக்கனியாகிய பின்னே கல்யாண வீட்டினிலே
வாழ்க்கை வழிதனை புகட்டிடவோ
தருவாக பிறந்தேன் - மனித
வாழ்வுதனை முடித்திடவோ
மண்ணிலே வேரூன்றினேன்?
வளர்ந்து செழிக்கு முன்னே மனிதர்களே !
வாளால் என் மேனிதனை துண்டிக்காதீர்கள்
வேதனைகள் எங்களுக்குமுண்டு நாம்
வாய் விட்டழும் சத்தங்கள் கேட்பதிலையா ?
வாழ வருகின்றோம் வாழ்த்த வருகின்றோம்
வாழையடியாகவே வம்சம் செழிக்கவே !
வாழ்வாங்கு வாழ வரமளிக்கின்றோம் - எங்கள்
வளவில் நின்று நாமே !

## அம்மா நீ மட்டும் போதும்

பள்ளிப்படிப்பும் வேண்டாமம்மா !
பள்ளிச்சீருடையும் வேண்டாமம்மா !

பாதுகாப்பற்ற நாட்டினிலே எதற்கம்மா படிப்பு?
பள்ளி மாணவியாகவும் வாழ முடியவில்லை

பருவப் பெண்ணாகவும் வாழ முடியவில்லை
படர்ந்த காடுகளைக் கண்டால்

பயம்தான் வருகுது அம்மா
பாதகம் செய்யும் பாதகர்கள்

பதுங்கியிருந்து பங்கு போட்டு
பாதகம் செய்திடுவோர்களோ என்று !

# நகர்ந்திடு

நகரமுடியவில்லை என்று நானிருந்தால்
என்னாகும் உங்கள் நிலைமை ?

நாடி நரம்பெல்லாம் அசைத்து
நாளெல்லாம் துடித்து

நிமிடமுள்ளைக் காட்டி
நித்திரை விட்டெழ மணியோசை இட்டு

நிதமும் நகர்கின்றேனே மனிதா !
நீ மட்டும் ஏன்?

நேரம் காட்டிடும் என்னைப் பார்த்து
நேரத்தோடு துயில் நீங்குகிறாய் இல்லை ?

## அன்னம் பகிர்ந்திடு!

நாளெல்லாம் காவல் செய்கின்றேன்
நாயாக வாழ்கின்றேன்

கள்வரை கண்டால் குரைக்கின்றேன்
கண்ணியமாய் இருக்கின்றேன்

கல்லால் அடியும் வாங்குகின்றேன் - உங்கள்
காலால் தினமும் மிதி படுகின்றேன்

கண்ணுறக்கமின்றி இரவு பகலாக சுற்றி வருகின்றேன்
கரிசனை காட்டுவீர்கள் என்றே !

வாசலிலே வாய் பார்த்து ஏங்குகின்றேன்
எச்சிற் சோறாவது கிடைக்குமென்றே !

# புரிந்துகொள்

ஆத்திரத்தில் அறிவிழந்து பேசி
உன்னையே விகாரப்படுத்தி
நோயாளி ஆகியே - நீ
படுக்கையிலே கிடந்து
உறவுகளையும் நீத்து
அன்பையும் இழந்து
வெறுமையாய் இருந்து
வறுமையாய் வாழ்ந்து
தனிமையிலே கிடந்து
பிணமாக மாறினாலும்
பணத்தோடு நீ போவதில்லை மனிதா !

## வாழவிடுங்கள்

வலை வீசாதீர்கள் - எங்களை
வலையில் சிக்க வைக்காதீர்கள்
வாழப்பிறந்தவர்கள் நாம் !
வாழ விடுங்கள் !

கொக்குக்கிற்கும் இரையாக வேண்டும் - உங்கள்
நாக்குக்கும் இரையாக வேண்டும் -
தித்திக்கும் நாவிற்கு நானா மீனானேன் !
தீயில் போட்டு வேகிட நாமா இனமானோம் ?

வண்ணாங் கொண்ட மீன்களாக வருகின்றோம் - உங்கள்
வீடுகளிலாவது அலங்கரித்து பாருங்களேன் !
வெய்யிலில் வாட்டாதீர்கள் எங்களை
விற்பனைக்கும் கொண்டு போகாதீர்கள் எங்களை !

தண்ணீரில் வாழ்வை தாருங்கள்
கொதிநீரில் வாழ்வை முடிக்காதீர்கள்
கருவாடு என்று கூறாதீர்கள்
கருவாடாக வாழும் வாழ்வை தராதீர்கள்

# ஏனிந்த நிலை?

ஊனமாக பிறந்தது என் தவறா !
இறைவனது படைப்பின் பிழையா ?

யாரைத்தான் மனம் நோவது ?
யாரிடம் தான் கேட்பது ?

அன்னை தந்தை தந்த அன்பின் கொடையா?
அலங்கரிக்க கூடாத பெண்ணின் உருவா ?

அவனியில் பிறந்தது இதற்குத்தானா?
ஊனப்பெண் என்ற நாமம் பெற்றிடத்தானா?

எனக்கு நான் ஊனமாக தெரியவில்லையே !
யாருமே எனக்கும் ஊனமாகத் தெரியவில்லையே!

மனதில் தான் குறையுமில்லையே உங்கள்
கண்ணுக்குத்தான் ஊனம் பிறந்ததேனோ ?

மணமாலை சூடாத மங்கையென ஆகிடத்தானா?
பிணமாலை சூடும் வரம் பெற்றிடுவேனோ ?

## என் மேனியும் பொன் மேனியே

எத்தனை சுமைகள் எத்தனை பாரங்கள்
இத்தனை காலம் வரை சுமக்கின்றேன் ! பொறுக்கின்றேன் !
இனியும் பொறுத்திடுவேன் !
பெண்ணின் பெருமையை காத்திடுவேன் !
இன்னல்கள் எனக்குமுண்டு மனிதா !

என்மேனி துளைத்து நீரை எடுக்கின்றாய் !
என் மேனி குடைந்து இல்லமும் அமைக்கின்றாய் !
இத்தனை வேதனைகள் தாங்கியும் - நான்
உங்களை காயப்படுத்தவில்லை
இனியும் அது நடப்பதில்லை !

கொஞ்சமேனும் கருணை காட்டுங்கள் எனக்கு !
துர்நாற்றம் வீசும் கழிவுகளை என்மீது வீசாதீர்கள் !
என் மேனிதனில் குப்பைகளை அள்ளி இறைக்காதீர்கள் !
தூய்மையாக நானும் வாழ்ந்திடவே !
என் மேனியும் பொன் மேனியே!

## தாயின் கருவறை

சலனமின்றி தூங்கிய அறை
அமைதியுடன் வாழ்ந்த அறை

சுகமான நினைவுகள் தந்த அறை
யாருமே அனுமதியின்றி வராத அறை

கலப்பிடமில்லா உணவு கிடைத்த அறை
கள்வரும் வராத அறை

குழந்தையாய் வாழ்ந்த அறை
அம்மாவுடனே ஒன்றிப்போன சொர்க்கமான அறை

## இணையமே!

இணையத்தான் ஆசை
இணையமே இதயம் ஒன்று தந்திடு
பாடப்புத்தகத்தால் படிப்பு ஏறவில்லை
முகப்புத்தகத்தால் முகவரி ஒன்று காட்டிடு
இரு இதயங்கள் ஒன்று சேர்த்து
இரு மனங்கள் ஒன்றித்து திருமணத்தில் கைகூடவே
இணையமே வழிகாட்டிடு !
ஒரு கணம் உன் தொடர்பு துண்டித்தால்
இருதயமே நின்றுவிடுதே!
இணைத்த பின் தொடர்பை துண்டிக்காதே !
இருதய ஒலியை கூட்டிடாதே இணையமே !

## மனைவியாக வா!

கையடக்கத் தொலைபேசி ஊடாக
கயல்விழியாளே உனை நேசித்தேன்
தவறுதலான இலக்கமூடாக உன்னை
தாரமாக்கிட ஆசைப்பட்டேன் - உன்
தந்தையிடம் சொல்லி தொடர்பை துண்டிக்காதே !
தமையனிடமும் சொல்லி கொன்று விடாதே !
தங்கத்தாலி செய்து தாரேன் கண்ணே !
திரும்பவும் அழைப்பை ஏற்படுத்தி விடுவேன்
தயங்காமல் சொல்லடி கண்ணே ஆமென்று என்
தாயிடம் சொல்லி மனைவியாக்குகின்றேன் நானே !

## வாழுங்கள்

திட்டமிட்டு வாழுங்கள்
திடமோடு வாழுங்கள்

சபதத்துடன் வாழுங்கள்
சச்சரவின்றி வாழுங்கள்

தானமிட்டு வாழுங்கள்
நிதானமோடு வாழுங்கள்

சிந்தித்து வாழுங்கள்
சிகரம் தொட வாழுங்கள்

சிக்கனமாக வாழுங்கள்
சீராக வாழுங்கள்

## மனிதனாக வாழ..

அகத்தை தூய்மைப்படுத்த
மனதை ஒருமுகப்படுத்து
வழிபாட்டில் ஈடுபட்டு
இறை சிந்தையில் மூழ்கிவிடு

வையகத்தில் வாழ்பவர்களை
வாழ்வாங்கு வாழ விடு
வந்தோரை வரவேற்றிடு
வரவேற்று விருந்தோம்பிடு

# காகிதங்கள் பேசுதடி

வெள்ளை மேனி யல்லவோ !
வெளிராத உருவல்லவோ !

ஆரம்பம் முதல் முடிவுரை
அற்புத எழுத்துக்களை சுமந்திடுவேனே

பத்திரிகைகளாக பெயர் எடுப்பவனும் நானே
பாசல் கட்டிட உதவுவதும் நானே

செய்திகளை சுமந்து வருபவனும் நானே !
தேசம் எங்கும் சென்றிடுவேனே !

கசக்கித்தான் எறியலாமோ ? என்
உருவை கிழித்துத்தான் போடலாமோ ?

தீயிற்குள் சங்கமிக்க வைத்திடலாமோ?
தண்ணீரில் கரையத்தான் எறிந்திடலாமோ?

கல்வியில் நீங்களெல்லாம் உயரவே
கரையேற்றிடும் என்னை குப்பைக்குள் போடாதீர்கள் !

# மொழி

சிங்களம் படிப்போம் வாரீர் - நம்
தமிழ் படும் பாட்டினை பாரீர்

தமிழின் அமுதம் எங்கே போனது ?
தாய்பூமி அல்லல் படுகிறது !

நாவிற்குள் மொழி செத்தொழிந்து போனதோ ?
நம் மொழி மறந்தே போனதோ ?

சிந்தித்து சிந்தித்து நீ பேசினாலும்
தித்தித்து தித்தித்து பேசும் தாய்மொழி போல் வந்திடுமோ?

# இளமை

இருளே நீ வர வேண்டாம் !
இருண்டு போனது நீ மட்டுமல்ல
என் வாழ்வும் தான்
மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தாதே !

இருள் வானில் நிலவாக
தனித்து நான் இருந்தால்
இளமையின் கொடூரம் நீ அறிவாயோ ?
இத்தனை காலமும் வாழ்ந்தது போதும் !

ஆதவனின் வரவுக்கு அனுமதி கொடு
நிலவின் வரவினை துண்டித்து விடு
நிதமும் பகலாகட்டும் !
பருவ மங்கையர்கள் வாழட்டும்
பார் மகளும் நானும் ஒன்றல்லவே !

# மரமும் மனிதனும்

மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
தினமும் மறந்தான் மரத்தின் பெருமையை மறந்தான்

காற்றின் பெருமையை மறந்தான்
சுவாசிக்க மறந்தான் மின்விசிறியை இணைத்தான்

சொகுசு கதிரையில் துயின்றான்
சோம்பேறியாக பெயரும் பெற்றான்

இயற்கையை இரசிக்க மறந்தான்
செயற்கையோடு ஒன்றித்துப் போனான்

எம்மினத்தை சரிக்க முயன்றான்
வேரோடு தினமும் அறுத்தான்

இல்லத்தின் கதவாக ஆக்கினான்
காற்றுக்காக வாயிற் கதவை திறக்கின்றான்

சவப்பெட்டியாக மாற்றினான் - இறுதியில்
எனக்குள்ளே சங்கமிக்கின்றான்

## யாழ் ஓசை கேட்கட்டும்

கண்களிலே மை பூசி கைத்தொலைபேசியை
பைகளிலே ஏந்தும் பெண்ணே !
சைலன்றில செல் போனை வைத்து
சஸ்பென்னாக காதலித்து
பைபரேசனாய் மனம் பதறி
றிங்ரோனாக கதறிடலாமோ ?

யாழ் ஓசை கேட்கும்
யாழ்ப்பாணம் சீர் கெடலாமோ?
யாழ் மீட்டும் யாழ் இசை பெருகட்டும்
யாழ்ப்பாணம் ஒன்றிக்க வழிபெருகட்டும்

## பட்டச்சான்றிதழுக்கு மரியாதை

பட்டதாரியானேன் பதவிக்காக ஓடித்திரிந்தேன்
கிடைத்ததோ பயிலுநர் பதவி !
நான்காண்டு நாயாய் தேய்ந்து படித்தும்
பட்டத்திற்கு கிடைத்த மரியாதை இது !
பயிலுனர் பதவியே !
பல்கலைக்கழக படிப்புக்கு இதுதான் கதி !
ஓராண்டு போன பின்தானாம் நிரந்தரப்பணி !
அது மட்டும் பத்தாயிரம் ரூபாவுக்கு அடி பணி தான் !

# தீயிற்கு ஒரு வேண்டுகோள்!

பச்சரிசி வேகுதில்லையே ! அனலே மூண்டுவிடு !
புழுதிக்குள் இருந்து புழுங்குகின்றேனே

ஊதுகுழலால் ஊதுகின்றேனே மூண்டு விடு தீயே !
பள்ளியிலிருந்து பாலகன் வந்து விடப்போகிறானே

பசி என்று அழுது வடிப்பானே !
தீயே நீ பற்றி விடு !

காஸ் அடுப்பும் இல்லையே !
எண்ணை அடுப்பும் இல்லையே

காற்றில் மூண்டு விடுவாய் நீயே !
ஓலைக்குடிசையில் பிறந்ததுக்கு இதுவா தண்டனை ? வயிற்றில்

ஒட்டிப்பிறந்த என் பிள்ளைக்கும் இதுவா தண்டனை ?
அம்மா பசிக்குது என்றால் எங்கு தான் போவேன்

எண்ணிப் பார்த்து பற்றி விடு தீயே !
தீயாக நீ இருக்காது தாயாக மாறிவிடு என் நிலைமை புரியும்!

# அம்மா வேணும்

பத்துமாதம் சுமந்து
வேண்டாத பிள்ளையாக ஈன்று
குப்பைக்குள் எறிந்து
கைவிட்டுப்போக எப்படியம்மா மனசு வந்தது ?

யாரம்மா உன் வயிற்றில் எனை படைத்தது?
பிரம்மனா? பெயர் தெரியாத என் அப்பனா?
பசி என்று புசிப்பதற்கு வழியில்லாமல்
உன்னை புசித்ததால் வந்த பிள்ளையோ நான் ?

தந்தை செய்த தவறை நீ
ஏனம்மா எனக்குச் செய்தாய் ?
உனைக் கைவிட்டதால் எனை நீ
கைவிட்டது சரியோ அம்மா ?

பருவ வயதை நீ அறியாமல்
பச்சிளம் பிள்ளை நானும் அறியாமல்
அறியா பருவத்திலே அனாதை இல்லத்தை
அறிமுகப்படுத்தி விட்டாயே அம்மா !

யார் எனது அம்மா !
யாவரும் படியுங்கள் !
என் அம்மாவுக்கு சொல்லுங்கள் !
அனாதை இல்லத்தில் அழுகுரல் ஒலிக்குதென்று!

# நாடு நாடாக வேண்டும்

பஞ்சம் இல்லா நாடு வேண்டும்
கொலை களவு இல்லா நிலை உருவாக வேண்டும்
காமம் வெகுளி இல்லாதிருக்க வேண்டும்
இரத்தம் சிந்தாத நாடாக மாறிட வேண்டும்
ஏழைகள் இல்லா நாடாக உருவாகிட வேண்டும்
செல்வம் செழித்து ஓங்க வேண்டும்
வறுமை செத்தொழிந்து போக வேண்டும்
நாடு நாடாக வேண்டும்.

## எங்கே யாழ் வஞ்சியர்கள்

நெற்றியில் வகிடெடுத்து குங்குமம் இட்டு
மஞ்சளில் நீராடும் பெண்ணினம் செத்தொழிந்ததோ ?

மெட்டி அணிந்து சலங்கை அணிந்து
பெண்ணென வெட்கம் கொள்ளும்

நிலைதான் அருகி விட்டதோ?
பாவாடை தாவணி பறந்து

எட்டு முழச் சேலை களைந்தெறிந்து
ஜீன்ஸ்சும் ரீசேட்டும் நாகரிகமாகிவிட்டதோ ?

மேற்கத்தேய நாகரிகம் யாழ்ப்பாண
கலாசார மாகிவிட்டதோ ?

எங்கே போனார்கள் யாழ் வஞ்சியர்கள்
எண்ணித்தான் பார்க்கின்றோம் நாளும்

காலங்கள் அருகி விட்டதோ நாம்
காணும் காட்சிதான் குறைந்து விட்டதோ ?

# இலங்கை நாடு நம் நாடு

இலங்கை மாதா ஈன்றெடுத்த பிள்ளைகள் நாம்
இனப்பிரச்சினைகள் இன்றி வாழ்ந்திடுவோமே !

ஈரிரண்டு பிள்ளைகளாம் நாம்
ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவோமே !

இயற்கை வளம் செழிக்க வைத்திடுவோமே !
இன்பங்கள் மட்டும் துய்த்திடுவோமே !

காமம் நீக்கி பாசம் பெருக்கி
பல்லுயிர் ஓம்பி வாழ்ந்திடுவோம்

மனிதத்துடன் வாழ்ந்திடுவோம்
மனிதாபிமானத்துடன் வாழ்ந்திடுவோம்

இனியொரு போதும் வன் முறைகள் வராது
இலங்கைத் திருநாட்டினை காத்திடுவோம்

ஒன்றே நாடு அதையே நாம் நாடி
நாடு விட்டு நாடு போகாமல் காத்திடுவோம் !

# நிம்மதி

நிம்மதியை தேடித் தேடி போகாதே
உன்னிடம் உள்ளதை மறவாதே
வெளியில் இல்லை நிம்மதி - அதை
தேடி நீயும் அலையாதே !

காசு பணத்தில் இல்லை நிம்மதி
கண்ணியப்பேச்சில் உள்ளது நிம்மதி
மாடி வீட்டில் கிடைப்பதில்லை நிம்மதி உன்
மனசுக்குள்ளே மறைந்திருக்கிறதே நிம்மதி

நிம்மதி நிம்மதி என்றே ஓடாது
அக்கம் பக்கம் பாராது
உன் மனதை நேசித்துப்பார்
உனக்குள் உறைந்துள்ளது நிம்மதி !

## நானும் ஒரு பெண்தானே

மனம் விட்டுப் பேச துணை தேட
பணம் மட்டும் கேட்கிறார்கள் சீதனப் பேய்கள்
பிணமாய் போகும் உடலுக்கு
விலை பேசிக்கேட்கிறார்கள்

மீனெல்லாம் கருவாடாகிறது வாழை
நாரெல்லாம் வாசமுள்ள மலர்களுடன் இணைகிறது
நான் மட்டும் ஏனோ நாதியற்று நிற்கின்றேன்
வாழாவெட்டி என்ற வரிசையில்

வாழத்தான் ஆசைகொண்டேன்
வாழாவெட்டி என்ற பெயரும் பெற்றேன்
வாழ்க்கைத்துணைவனாக வந்தவன்
பாதியிலே விட்டதால்

மறுபிறவி கிடைக்குமா ?
மறுவாழ்வு மலருமா?
மறுமணம் தான் நடக்குமா?
நானும் ஒரு பெண்தானே !

## நாளைய உலகம்

தோல்விகள் பல சுமந்து
துவண்டு போன நெஞ்சங்களே !

இழப்புக்கள் பல இழந்து
இதயம் நொந்த உறவுகளே !

அவமானப்பட்டு அசிங்கப்பட்ட
என் தோழர்களே !

வெற்றிக்கனிகள் புசித்திட
வியர்வை சிந்திப் போராடுங்கள் !

நொந்து போய் ஒதுங்கி விடாமல்
இதயத்தை பலமாக்கி கொள்ளுங்கள் !

நாளைய உலகம்
நம் கைகளில் என்றே !

## எங்களுக்கும் வழி கொடுங்கள்

பூமித்தாயே பொறுமை இழக்காதே
பூகம்பமாய் வெடிக்காதே !
உனை நம்பித்தானே இல்லிடம் அமைத்தோம் !
உதறித்தான் நீ விட்டிடலாமோ !

கடல் அலையே கொந்தளிக்காதே !
கடற் பயணத்தில் என்னவரும் பயணிக்கின்றானே !
கட்டிய மனைவி என்னைக்காத்திடவே !
கழுத்தில் தாலி காப்பது நின் கடமையல்லவோ !

பசி போக்கிடும் தானியங்களே !
விலைவாசியை கூட்டாதீர்கள் !
ஏழை மக்கள் எங்கள் வயிற்றிலடிக்காதீர்கள் !
எல்லோருக்கும் பகிர்ந்து தந்திடுங்கள் !

வைத்தியசாலை சென்றாலும் - கால்
வலிக்க வரிசையில் நின்றுதான்
இலக்கம் பெற்று இன்னல்கள் தாங்கி
வைத்தியரிடமும் வைத்தியம் பெற முடிகிறது !

வேண்டாமே இந்தக் கொடூரம்
தாங்காதே இவ் இதயம்
தூங்கத்தான் முடியாதே
தரணியில் வாழ விடு வையகமே !

## எங்களுக்கும் தண்ணீர் தாருங்கள்

தாகத்தில் தவிப்பவர்கள் நாங்களும் தான்
நீங்களும் தான் மனிதர்களே !

பசுமை வளம் குறைந்தால் உங்கள்
வறுமைகளும் பெருகிவிடும் !

எங்கள் வனப்பும் குறைந்து விடும்
பஞ்சங்கள் துளிர்விடும்

விண்ணக நீரை நம்பி வயல்களிலே வசித்தால்
வையகம் தான் செழித்திடுமா ?

நாளாந்தம் நீவீர் பருகும் நீரைப்போல
நாள்தோறும் எங்களுக்கும் தண்ணீர தாருங்கள்

அரும்பாகி மொட்டாகி காயாகி கனியாகி
உங்கள் பசியாற்ற வந்திடுவோம் நாமே !

## நீதி எங்கே?

மனிதன் செத்து விட்டானா ? நாட்டில்
மனிதம் செத்துப் போய் விட்டதா ?

எத்தனை காலம் துயின்றிருப்பாய் ?
என்னருமைத்தாய் நாடே ?

நீயாவது நீதி கேட்க மாட்டாயோ ?
நிம்மதியான நாட்டை தந்து விடமாட்டாயோ ?

பொறுத்தது போதுமென்று பொங்கியெழ மாட்டாயோ?
பொல்லாத கயவர்களை கொன்றழிக்க மாட்டாயோ ?

கேட்கின்றேன் நாளும் நீதிதனை ! நாட்டில்
மனிதாபிமானமுள்ள நீதி வேண்டுமென்றே !

## பெண்ணெனப்படுபவள் யார்

அச்சப்பட்டு நாணப்பட்டு
அடக்கப்பட்டு அடங்கி நிற்பவளா ?

காஞ்சிப்பட்டு நெற்றிப்பொட்டு
மஞ்சளிட்டு தாலி கட்டி நிற்பவளா ?

கோபப்பட்டு நீதி கேட்டு
நிலைகெட்டு தடுமாறிப்போவளா ?

விலைப்பட்டு பணமிட்டு
மாமியார் வீட்டுக்குச் செல்பவளா ?

வாக்கப்பட்டு மௌனமிட்டு
வளையிலிட்டு பிள்ளை பெறுவளா ?

## தந்தையின் தவிப்பு

குடிமகனாக வாழ மணமகன் வேண்டும் - நன்றாக
குடித்தனம் செய்ய வேண்டுமென்றே மணமகன்
ஒருவனைத் தேடினேன் வந்ததே ஒரு துணை
குடி மகனாக வந்தான் குடியோடு உறைந்துவிட்டான்

கட்டிய மனைவியை வன்முறை செய்கின்றான்
ஏனடா என்று கேட்டான் - நீதானே சொன்னாய்
குடி மகனாக வேண்டுமென்று அதைத்தான்
தினமும் செய்கின்றேன் என்றான்

என்னதான் விளக்கம் சொல்வேன் ?
எண்ணிப்பார்த்து எப்படி வேதனை தீர்ப்பேன்?
பெற்ற மகளை மனைவியாக்க கொடுத்து விட்டேனே ?
மனைவியான என் மகளை மீண்டும்
மகளாக தந்து விடுவானோ?

இன்னொரு துணை தேட
இழந்ததை மீட்டுக்கொடுக்க
இனியொரு ஜென்மம் எடுப்பேனோ?
இனியொருவன்தான் நல் வாழ்வு தந்திடுவானோ ?

தாயாகி விட்டாளே தவிப்புடன் வாழ்கிறாளே ?
கண்ணீர் சிந்தாத முகத்தோடு வளர்த்தேனே !
தங்கமே என்று பாசம் கொஞ்சினேனே ? குடிகாரா
நீயொரு தந்தையாகி உனக்கொரு
மகள் பிறந்தால் தான் தெரியும் !

## விதியை மாற்றுபவன் நீ

மாற்று திறனாளி நீ - விதியை
மாற்றும் திறனாளி நீ
ஏற்றம் கட்டிடுவாய் நீ - வாழ்வில்
ஏற்றம் கண்டிடுவாய் நீ

இலக்கணம் கற்காதவன் நீ
தலைக்கனம் இல்லாதவன் நீ
இமைப்பொழுதும் உறங்காதவன் நீ
தர்மத்தை காப்பவன் நீ

மௌனமொழியால் கவர்பவன் நீ - பிறர்
மனங்களை கவர்பவன் நீ
வேகமாய் செயலாற்றுபவன் நீ
விவேகமாய் சிந்திப்பவன் நீ

# மண்வளம் காக்கும் கண்மணிகள்

கப்பல் கட்டி விளையாடி
களிப்பாக உரையாடி
கலக்கமின்றி நகையாடி
கண்மணிகள் நாம் வாழ்த்திடுவோம்

பாரில் குளிர்மை பெருக்கி
பசுமை செழித்தாடிட
பகலிரவாய் மண்வளம் பேணி
பாலகர் நாம் பஞ்சம் நீக்கிடுவோம்

புல்லினங்கள் நாட்டி
புள்ளினங்கள் பெருகிட
பசுமை வளம் காத்திட
பட்டாம் பூச்சி சிறுவர்களாகிடுவோம் !

# மனைவி தந்த பரிசு

மங்கையாய் உனைப்பாத்து
மஞ்சள் தாலி தந்தேனே
பிறை நிலா நெற்றியிலே
குங்குமமும் இட்டேனே
மனைவியாக வாழ்வாயென்று
மங்கல வாழ்வும் தந்தேனே
தேசம் விட்டு தேசம் போய்
மாளிகையில் நீ வாழவே
ஆசையுடன் வாழ வந்தவனுக்கு
யாரோ ஒருவன் மனைவியென்று
பரிசு தந்தது ஏனடி என்னவளே!

# ஒரு நிமிடம் சிந்தியுங்கள்

கச்சான் கடையிலே
கடதாசிப்பைகளாக
காத்திருக்கிறேன்
கச்சானை கையளிப்பதற்கே!

பத்திரமாய் பணம் கொடுத்து
பத்திரமாக கச்சானுடன் வாங்கி
படபடவென்று தின்று முடித்து
பாதி வழியில் கசக்கி எறிகிறாயே!

பாதுகாத்து காத்து தந்தவனுக்கு
இதுவா நீ காட்டும் நன்றி
பாதைகள் எல்லாம் பறக்கின்றேனே - யாழ்
பாண நகரினை பாழாக்கிடத்தானோ?

பகுத்தறிவுள்ள மனிதனே
படிப்பால் நீ உயர வழி தந்தவன் நானே
பாதி நிமிடம் எனை படித்துப்பார்
பார் போற்ற உயர்ந்திடுவேன் நானே!

## வஞ்சியர்களே வன்முறையைத் தூண்டாதீர்

கடைபாதை வழியினிலே
உடைபாதியாய் போறவளே
இடைபாதியைக் காட்டி
தடம்மாற வைப்பது சரிதானோ?

தாராளமா காட்டுகிறாயே
தடுமாறிப் போகின்றேனே
தயாள குணம் படைத்தவள் நீயோ
தயாபரியும் ஆனவள் நீயோ

வாள்விழிப்பார்வையிலே வலைவீசி
வேல்நெஞ்சைப் பிளந்து குடிகொண்டு
வெட்டியாய் நீ பேசிப் பேசி
வன்முறையைத் தூண்டுகிறாயே

வஞ்சனைகள் செய்து காதல் செய்து
வஞ்சகமாய் திறமாய் நடித்து ஏமாற்றி
வன்முறைக் காளையராக உருவாக்கி
வாதம் செய்து தியாயிப்பதும் சரிதானோ?

# இத்தனையும் கிடைத்திடுமோ?

நல்லாட்சிநிலவவேண்டும்
நாட்டினிலேநீதிசெழிக்கவேண்டும்
நாடுநலம் பெறவேண்டும்
நாளெல்லாம் மக்கள் வாழவாழவேண்டும்

காணாமற்போனோர் கைசேரவேண்டும்
கண்ணீர் முகங்கள் நிலைமாறவேண்டும்
கலவரம் இல்லாதநாடாகவேண்டும்
காற்றும் கூட தென்றலாகவீசவேண்டும்

செல்வம் பெருகிமக்கள் வாழ்ந்திடவேண்டும்
செல்லடிகள் இன்றிவாழ்ந்திடவேண்டும்
செல் வராதநாடாகமாறிடவேண்டும் - மக்கள்
செல்வந்தர்களாகவாழ்ந்திடவேண்டும்

குருதிசிந்தாதநாடாகமாறிடவேண்டும் - மக்களை
குண்டுதுளைக்காதநாடாகமற்றிடவேண்டும் - நற்
குணமுள்ளமனிதநேயம் இருந்திடவேண்டும் - மாங்கையர்
குங்குமம் நிலைத்திடவேண்டும்

வாழ்கஅனைவரும் என்றுவாழ்ந்திடவேண்டும் - உறவுகளை
வாளால் வெட்டிவாழ்ந்திடும் நிலைமாறிடவேண்டும்
வானமும் எம்மைவாழ்த்திடவேண்டும் - எம் வாழ்விற்காக
வையகமும் வாழ்த்திடும் வரம் கிடைத்திடவேண்டும்

தங்கள் ஆசிகளுடன்

என் பயணம் தொடரும்...

-நன்றி-

அரியாலையூர் செல்வி. மிஷாந்தி செல்வராஜா

## காகிதங்கள் பேசுதடி,
## பேசப்படும்....



யாழ்ப்பாணம் அரியாலையைப் பூர்வீகமாகக் கொண்ட கவிதாயினி செல்வி.மிஷாந்தி செல்வராஜா அவர்களின் எழுத்துக்கள் இம் மண்ணில் தடம்பதிக்கும். சமூகச் சிந்தனையுடனான இவரது பேச்சுக்களைப் போலவே கவிதைகளும் ஆழமானவை.

தொடர்ந்து வரும் காலங்களில் கவிதை, கட்டுரை, சிறுகதை நாவலென அதிகமானவை பெண்களினாலே எழுத்துருவாகி வெளியாகின்றன என்பது பெருமை.

அந்த வகையில், எழுத்துக்களின் மூலம் ஒரு புது விடியலைத் தோற்றுவிக்க முடியுமெனும் நம்பிக்கையுடன் அடியெடுத்துவைத்த செல்வி.மிஷாந்தி செல்வராஜா அவர்களின் ஆழுமை பாராட்டப்பட வேண்டியதே. வலிகளுடனும் ஏமாற்றங்களுடனும் போராடி மீட்சி பெற்றுக் "காகிதங்கள் பேசுதடி" எனும் இரண்டாவது நூலை உங்கள் பார்வைக்காய் கோபால் வெளியீட்டகத்தின் வெளியீடாக கொண்டு வந்துள்ளார். ஏற்கனவே தனது முதல் நூலான "மூன்றாம் முத்தம்" எனும் குறுநாவலை வெளியிட்டிருந்த நூலாசிரியர்.

சர்வோதயமும் தேசோதயமும் இணைந்து நடாத்திய மக்கள் திலகம் எம் ஜீ ஆர் அவர்களின் 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வின்போது கலைமாமணி என்ற கௌரவப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இக் காகிதங்கள் நிச்சயம் பேசும். பேசப்படும் என்பதில் எவ்வித ஐயப்படுகளுமில்லை தொடர்ந்தும் படைப்புக்களை மக்கள் மத்தியில் கொண்டுவருவார் எனும் நம்பிக்கையுடன்.

வாழ்த்துக்களுடன்
**காவலூர் அகிலன்**

9 789557 899039
Rs.220/-
VIJAY PRINTING PRESS